


மே முதல் நாளை, தொழிலாளர்களுக்குரிய மரியாதையையும், மதிப்பையும், அவர்களது உரிமையையும் போற்றும் வகையில் மதராஸ் பெர்டிலைசர்ஸ் லிமிடெட் (MFL) தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் தலைவரான கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள், 1.5.2026 அன்று காலை, MFL தொழிற்சாலை முகப்பில் கழகக் கொடியேற்றினார். உடன் எம்.எப்.எல்.தொழிற்சங்க நிர்வாகிகள் உடனிருந்தனர்.






உலக உழைப்பாளிகளின் திருநாளாம் மே 1 தினத்தை யொட்டி சென்னை, சிந்தாதிரிப்பேட்டை மேதினப் பூங்காவில் அமைந்துள்ள மே தின நினைவுச் சின்னத்திற்கு கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், தி.மு.கழக நிர்வாகிகள், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சென்னை மாநகர மேயர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் மலரஞ்சலி செலுத்த வருகை தந்த போது, தொ.மு.ச. பேரவை தலைவர் கி.நடராசன், பேரவைப் பொருளாளர் கோ.சி.வள்ளுவன் ஆகியோர் தலைமையில், பேரவை நிர்வாகிகள், மாநகர் போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்ற சங்க பொதுச் செயலாளர் த.சரவணகுமார், பொருளாளர் கி.சீனிவாசன், தலைமை நிலைய செயலாளர் அ. தங்கராஜ், நிர்வாக பணியாளர் பொதுச் செயலாளர் வி.மகேந்திரன் மற்றும் தலைமை சங்க நிர்வாகிகள், சங்க முன்னோடிகள் வரவேற்பு அளித்தனர்.

### சோலார் உற்பத்தியில் அசத்தல்:

# தென்னிந்திய மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடம்!

## ஒன்றிய மின்சார ஆணையம் தகவல்!

சென்னை, மே 4 -

சூரியசக்தி மின் உற்பத்தியில் தென்னிந்திய மாநிலங்களிலேயே தமிழகம் முதலிடம் வகிப்பதாக ஒன்றிய மின்சார ஆணையம் தகவல் தெரிவித்துள்ளது. காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்தவும், புவி வெப்பமடைவதை குறைக்கவும் உலக நாடுகள் அனைத்தும் “பசுமை ஆற்றல்” நோக்கி வேகமாக பயணித்து வருகின்றன. அந்த வகையில், நிலக்கரி போன்ற இயற்கை வளங்களை சார்ந்திருக்காமல், இயற்கையாக கிடைக்கும் சூரிய ஒளியை பயன்படுத்தி மின்சாரம் தயாரிப்பதில் இந்தியா உலக அளவில் கவனம் ஈர்த்து வருகிறது. குறிப்பாக, இந்தியாவின் தென் பகுதியில் சூரிய மின்சக்தி உற்பத்தியில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாக உருவெடுத்துள்ளது.

அதன்படி, ஒன்றிய மின்சார ஆணையம் அண்மையில் வெளியிட்ட தரவுகளின்படி, கடந்த மார்ச் மாதத்தில் தென்னிந்திய மாநிலங்களில் மொத்தம் 613 கோடி யூனிட் சூரிய சக்தி மின்சாரம் உற்பத்தியாகி உள்ளதாம். இதில் தமிழகம் மட்டும் தனிச்சிறப்பாக 218.60 கோடி யூனிட்களை உற்பத்தி செய்து முதலிடத்தை அலங்கரிக்கிறது. கடந்த 2025ம் ஆண்டு மார்ச் மாதத்தில் தமிழகத்தின் உற்பத்தி 160 கோடி யூனிட்களாக மட்டுமே இருந்தது குறிப்பிடத்தக்கது. ஓராண்டு காலத்திற்குள் சுமார் 58 கோடி யூனிட்கள் கூடுதலாக உற்பத்தி செய்யப்பட்டு, தமிழகம் மின் உற்பத்தியில் தன்னிறைவை நோக்கி வேகமாக நடைபோடுகிறது. தமிழகத்தை தொடர்ந்து கர்நாடகா 181 கோடி யூனிட்களுடன் இரண்டாவது இடத்தை பிடித்துள்ளது. ஆந்திரா 113 கோடி யூனிட்களையும், தெலுங்கானா 71 கோடி யூனிட்களையும் உற்பத்தி செய்துள்ளன.

கேரளா 29 கோடி யூனிட்களுடன் அடுத்த இடத்தில் இருக்க, புதுச்சேரி யூனியன் பிரதேசம் 10 லட்சம் யூனிட்களை பதிவு செய்துள்ளது. இந்த ஒப்பீட்டு லிஸ்ட்டில், தமிழகத்தின் பங்கு மிகப்பெரிய அளவில் இருப்பது நன்றாகவே தெரியவருகிறது. தமிழகத்தில் நிலவும் சாதகமான வானிலைதான் இந்த வெற்றிக்கு மிக முக்கிய காரணமாக பார்க்கப்படுகிறது. ஆண்டுக்கு 300 நாட்களுக்கு மேல் சூரிய ஒளி தடையின்றி கிடைப்பதால், சூரியசக்தி மின் நிலையங்களுக்கு தமிழகம் ஒரு சொர்க்கபுரியாக மாறியுள்ளது. சூரியசக்தி மின் நிலையங்கள் இதன் விளைவாக, பல்வேறு தனியார் நிறுவனங்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் நிலப்பரப்புகளில் அதிக திறன் கொண்ட சூரியசக்தி மின் நிலையங்களை அமைக்க மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றன.

அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் மட்டுமல்லாமல், சாமானிய மக்களும் இப்போது சூரிய சக்தியின் முக்கியத்துவத்தை உணரத் தொடங்கி விட்டார்கள். கரண்ட் செலவை குறைக்க வேண்டும் என்ற நோக்கத்தில், வீடுகள் மற்றும் அலுவலகக் கட்டிடங்களின் மேற்கூரைகளில் சூரியசக்தி தகடுகளை பொருத்துவது தற்போது ஒரு மக்கள் இயக்கமாகவே மாறி வருகிறது என்று சொல்லலாம். கடந்த மார்ச் மாத நிலவரப்படி, தமிழகத்தின் மொத்த சூரியசக்தி மின் உற்பத்தித் திறன் 13,579 மெகாவாட் என்ற நிலையை எட்டியுள்ளது.

மழைக்காலங்களைத் தவிர்த்து மிச்ச நாட்களில் தினமும் சராசரியாக 4 முதல் 5 கோடி யூனிட் வரை மின்சாரம் தங்குதடையின்றி உற்பத்தியாகிறது. கடந்த நிதியாண்டுடன் ஒப்பிடுகையில், தமிழகத்தின் வளர்ச்சி வியக்க வைக்கிறது. 202425 நிதியாண்டில் 1,573 கோடி யூனிட்களாக இருந்த சூரியசக்தி மின் உற்பத்தி, 2025 ஏப்ரல் முதல் இந்த ஆண்டு மார்ச் வரையிலான காலகட்டத்தில் 1,969 கோடி யூனிட்களாக உயர்ந்துள்ளது. இந்த புள்ளிவிவரங்கள் தமிழகம் பசுமை ஆற்றல் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் இந்தியாவிற்கே வழிகாட்டியாகத் திகழ்வதை உறுதிப்படுத்துகின்றன.

### வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# வாக்கு எண்ணும் மைய முகவர்களுக்கான ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்கினார்!

வேலூர், மே.4-

நடந்து முடிந்த சட்டமன்ற பொதுத் தேர்தலில் வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க.விற்குட்பட்ட சட்டமன்ற தொகுதிகளில் பதிவான வாக்கு எண்ணும் பணி குறித்து வேலூர் தெற்கு மாவட்டச் செயலாளரும், அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினருமான ஏ.பி. நந்தகுமார் எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்கினார்.

நடந்து முடிந்த தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தலில் வேலூர் தெற்கு மாவட்ட திமுக - விற்குட்பட்ட 43 - வேலூர், 44 - அணைக்கட்டு, 46 குடியாத்தம் ஆகிய மூன்று சட்டமன்ற தொகுதிகளில் கடந்த 23.04.2026 அன்று நடந்த வாக்குபதிவின் போது வாக்காளர்களால் பதிவு செய்யப்பட்ட வாக்குகள் எண்ணும் பணி வேலூர் அரசு தந்தை பெரியார் தொழில்நுட்ப மற்றும் பொறியியல் கல்லூரியில் 04.05.2026 திங்கட்கிழமை அன்று காலை 07.00 மணி முதல் நடைபெற உள்ளது. இதன் பொருட்டு மூன்று சட்டமன்ற தொகுதிகளின் திமுக மற்றும் கூட்டணி கட்சி சார்பில் தேர்வு செய்யப்பட்ட வாக்கு எண்ணும் மைய முகவர்கள் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்து கழக சட்டத் துறை மூலமாக காணொளி காட்சி ஆலோசனை கூட்டம் 02.05.2026 சனிக்கிழமை அன்று முற்பகல் 11.00 மணிக்கு வேலூர் சட்டமன்ற தொகுதி சார்பில் வேலூர் பேபி மஹாலிலும், அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி சார்பில் வேலூர் தெற்கு மாவட்ட திமுக அலுவலகத்திலும், குடியாத்தம் சட்டமன்ற தொகுதி சார்பில் குடியாத்தம் புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள ஹயக்கிரிவர் திருமண மண்டபத்திலும் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வேலூர் தெற்கு மாவட்ட செயலாளரும், அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினருமான ஏ.பி. நந்தகுமார் எம்.எல்.ஏ ஆலோசனை வழங்கினார்.

எனவே வேலூர், அணைக்கட்டு மற்றும் குடியாத்தம் ஆகிய மூன்று சட்டமன்ற தொகுதிகளில் திமுக மற்றும் கூட்டணி கட்சி சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்கள் மற்றும் அந்தந்த தொகுதிகளில் வேட்பாளர்களுக்காக தேர்வு செய்யபட்ட வேட்பாளர்களின் நேரிடை முகவர்கள், வாக்கு எண்ணும் மைய முகவர்கள் கலந்துகொண்டனர்.

# டெல்லியில் அடுக்குமாடி குடியிருப்பில் தீ விபத்து!

புதுடெல்லி, மே. 4–

விவேக் விஹார் என்ற பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு வீட்டில் ஏற்பட்ட தீ விபத்தில் 9 பேர் உயிரிழந்தனர். ஏ.சி. வெடித்ததில் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக போலீசார் தெரிவித்துள்ளனர்.

டெல்லியின் ஷாதாரா பகுதியில் உள்ள விவேக் விஹாரில் உள்ள நான்கு மாடி குடியிருப்பின் இரண்டாவது தளத்தில் இன்று அதிகாலை திடீரென தீப்பிடித்தது. இந்தத் தீ மிக விரைவாக கட்டிடம் முழுவதும் பரவியதால், குடியிருப்பில் இருந்தவர்கள் வெளியேற முடியாமல் சிக்கிக் கொண்டனர்.

தீ விபத்து குறித்து தகவல் கிடைத்ததும், தீயணைப்புத் துறையினர் 14 வாகனங்களுடன் சம்பவ இடத்திற்கு விரைந்து மீட்புப் பணிகளை மேற்கொண்டனர். சுமார் இரண்டரை மணி நேரப் போராட்டத்திற்குப் பிறகு தீ ஓரளவுக்குக் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

இந்த விபத்தில் சிக்கி இது வரை 9 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மேலும் உயிரிழப்புகள் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது. தீ விபத்தில், படுகாயமடைந்த சிலர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தற்போது தீ அணைக்கப்பட்டிருந்தாலும், கட்டிடம் முழுவதும் கரும் புகை சூழ்ந்துள்ளதால் மீட்புப் பணியில் தொய்வு ஏற்பட்டுள்ளது.

கட்டிடத்தின் மேல் தளங்களில் யாராவது சிக்கியுள்ளனரா என்பதைக் கண்டறிய தீயணைப்பு வீரர்கள் தொடர்ந்து தேடுதல் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். ஏ.சி. வெடித்ததில் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக முதற்கட்ட தகவல் வெளியாகியுள்ளது.

# ஆஸ்திரேலியாவில் இந்திய விவசாயிகள் வர்த்தகம்!

மெல்பொர்ன், மே. 4-

இந்திய விவசாயிகளுக்கு பாதிப்பின்றி ஆஸ்திரேலியாவுடன் வர்த்தக ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பதாக தூதர் பிலிப் கிரீன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கான ஆஸ்திரேலிய தூதர் பிலிப் கிரீன் ஒரு தனியார் செய்தி நிறுவனத்துக்கு பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது:

வேளாண்மை துறையில் இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வாய்ப்பு உள்ளது. இந்திய விவசாயிகளுக்கு பாதிப்பு இல்லாமல் அதை செய்ய முடியும்.

ரக்கு, சேவை என இரு பக்கங்களிலும் நாம் வர்த்தகத்தை விரிவுபடுத்தலாம். ஒருவர் மற்றவரின் தகுதிகளை அங்கீகரித்து முன்னேறிச் செல்லலாம். அதன் மூலம் மக்கள் இரு நாடுகளிலும் பணியாற்றலாம்.

ஆஸ்திரேலிய விசா முறை, இனபாகுபாடு பார்ப்பது இல்லை. ஆஸ்திரேலியாவில் இருக்கும் வெளிநாட்டினரில் பெரும் பகுதியினர் இந்திய மாணவர்கள் தான்.

இவ்வாறு அவர் கூறினார்.

### பி.இ., பி.டெக் படிப்புகளுக்கு

# ஆன்லைன் விண்ணப்பப் பதிவு!

## ஜூன் 2 வரை விண்ணப்பிக்கலாம்!

சென்னை, மே. 4-

பிளஸ் 2 தேர்வு எழுதிய மாணவ, மாணவிகளுக்கான தேர்வு முடிவுகள் விரைவில் வெளியாக உள்ளது. இப்போது இருந்து மேற்படிப்புகள் தொடர்பாக பிளஸ் 2 தேர்வு எழுதிய மாணவர்கள் ஆயத்தமாகி வருகின்றனர். இந்நிலையில் பி.இ. மற்றும் பி.டெக் விண்ணப்பப் பதிவு ஆன்லைனில் தொடங்கியுள்ளது.

மாணவர்கள் இதற்கென பிரத்யேகமாக உருவாக்கப்பட்டுள்ள www.tneaonline.org என்ற இணையதளத்தின் வாயிலாகத் தங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம். அரசு ஒதுக்கீடு இடங்களில் சேர்வதற்கான கலந்தாய்வில் பங்கேற்க இன்று முதல் ஜூன் 2 வரை விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பப் பதிவின் போது மாணவர்கள் தங்களின் அடிப்படை விவரங்கள், மதிப்பெண் சான்றிதழ்கள் மற்றும் சாதிச் சான்றிதழ் உள்ளிட்ட ஆவணங்களை மின்வருடல் (Scan) செய்து பதிவேற்ற வேண்டும். இணையதள வசதி இல்லாத மாணவர்களுக்காக தமிழ்நாடு முழுவதும் 110 பொறியியல் சேர்க்கை மையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

1800 425 0110, theacare@gmail.com மூலம் சந்தேகங்களை நிவர்த்தி செய்யலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பப் பதிவு முடிந்தவுடன் மாணவர்களின் கட்ஆஃப் மதிப்பெண்கள் அடிப்படையில் தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டு, அதன் பின்னரே இணையவழி கலந்தாய்வு (Online Counselling) பல்வேறு சுற்றுகளாக நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா பி. மதிவாணன்

### மே 4 (2023)



இளம்வயதிலேயே தீவிரமாக கழகப் பணியாற்றத் தொடங்கி, கிளைச் செயலாளர், வட்ட பிரதிநிதி, ஒன்றுபட்ட தஞ்சை மாவட்ட பிரச்சாரக்குழு உறுப்பினர், தொடர்ந்து 25 ஆண்டுகள் செம்பனார்கோவில் ஒன்றியக் கழகச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாநில விவசாயத் தொழிலாளர் அணிச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

செம்பனார்கோவில் ஒன்றிய கவுன்சிலராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம், சட்டநகல் எரிப்புப் போராட்டம், இலங்கை தமிழர் பிரச்சினை போராட்டம் ஆகியவற்றில் கலந்து கொண்டு கைதாகியதோடு, மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு, காலில் விலங்கிட்டுக் கடைத் தெருவில் இழுத்து வரப்பட்டு, திருச்சி மத்திய சிறையில் ஒரு ஆண்டும் – இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் மூன்று மாதம் கடுங்காவல் தண்டனையும் பெற்று சிறைவாசம் அனுபவித்தவர்.


“கழகத்துக்கு இவர் ஆற்றிய பெரும் பணிகளுக்கான அங்கீகாரமாக ‘பெரியார் விருது’ பெற்றவர். இவரது மறைவு, கழகத்திற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். கழக வரலாற்றில் அவர் புகழ் என்றென்றும் நிலைத்து நிற்கும்” என கழகத் தலைவர் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மதுரை சோ. பால்ராஜ்

### மே 4 (2015)



இளம் வயதிலேயே கழகத்தின்மீது பற்று கொண்டு கழகப் பணியாற்றியவர்.

ஐ.சி.எப்–ல் பணியாற்றிய போது தொ.மு.ச. பேரவை ஆரம்பித்த போதே அதில் பொறுப்பு வகித்தவர்.

பேரறிஞர் அண்ணா – தலைவர் கலைஞர் –பொதுச்செயலாளர் பேராசிரியர் ஆகியோரின் அன்பைப் பெற்றவர்.

தலைவர் கலைஞர் அவர்களால் “பால் உள்ள கொண்ட பால்ராஜ்”, “பாட்டாளிகளின் தோழன் பால்ராஜ்” என்று பாராட்டப்பட்ட இவர், 1989–ல் மதுரை மத்திய சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு, வெற்றி பெற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் பங்கேற்றதோடு, இரயில்வே துறையில் பணியாற்றிக் கொண்டிருந்தபோதே இலங்கைத் தமிழர்களுக்காக ரயில் மறியல் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறைவாசம் அனுபவித்தவர்

தலைமைக் கழகம்
தி.மு.க.